**ஜூன் – 14**

# TNPSC துளிகள்

- சென்னையிலுள்ள SIMS என்ற மருத்துவமனையானது, மும்பையைச் சேர்ந்த 61 வயது நோயாளிக்கு இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த சொருகு குழாய் வழி (டிரான்ஸ் கேத்தர்) பெருநாடி வால்வு மாற்று (TAVR) மற்றும் Frozen Elephant Trunk (FET) எனும் ஒட்டு அறுவை சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்துள்ளது.
- புது டெல்லியில் நடைபெற்ற தேசிய முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு நிதியத்தின் (NIIF) ஆளுகைக் குழுவின் (GC) 6வது கூட்டத்திற்கு மத்திய நிதியமைச்சர் தலைமை தாங்கச் செய்தார்.
- இந்திய லோக்பாலின் முழு அமர்வு ஆனது, "Empower Citizens, Expose Corruption" என்ற ஒரு புதிய முழக்கத்தினை ஏற்றுக் கொண்டுள்ளது.
- இந்தியக் கடற்படை மற்றும் ஐக்கியப் பேரரசின் கடற்படை ஆகியவை வட அரேபியக் கடலில் ஒரு ரோந்துப் பயிற்சியை (PASSEX) மேற்கொண்டன.
- மங்கோலியாவில் 22வது கான் குவெஸ்டின் என்ற பன்னாட்டு இராணுவப் பயிற்சியில் இந்திய இராணுவம் பங்கேற்கிறது.
- மகாராஷ்டிராவின் சிந்துதுர்க் மாவட்டத்தில் உள்ள வெங்குர்லாவில் உள்ள நிவதி ராக்ஸ் எனப் படும் பாறை அமைப்பு அருகே நிறுத்தப்பட்டுள்ள படையிலிருந்து நீக்கப் பட்ட INS குல்தார் எனும் போர்க்கப்பலைச் சுற்றி இந்தியாவின் முதல் கடலடி அருங் காட்சியகம் மற்றும் செயற்கை பவளப்பாறை ஆனது உருவாக்கப்பட உள்ளது.
- புது டெல்லியில் 3வது சர்வதேசத் தொலைத்தொடர்பு ஒன்றியத்தின் (ITU-T) தொலைத் தொடர்பு வலையமைப்புகளுக்கான AI-Native (FG-AINN) குறித்த கவனம் செலுத்தும் குழு கூட்டத்தினை இந்தியா நடத்தியது.
- பிரான்சு நாட்டின் நைஸ் நகரில் நடைபெற்ற IALA சபையின் 2வது அமர்வில் சர்வதேச கடல்சார் உதவிகள் அமைப்பின் (IALA) துணைத் தலைமைப் பொறுப்பில் இந்தியா பங்கேற்றது.
- இந்தியத் தர நிர்ணய சபையானது (QCI), குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்களுக்கான (MSME) எண்ணிம அங்கீகார அணுகலை மேம்படுத்துவதற்கும், தர நிலைகளுக்கான பொதுமக்களின் உறுதிப்பாட்டை மிக நன்கு ஊக்குவிப்பதற்கும் புதுப்பிக்கப் பட்ட NABL இணைய தளம் மற்றும் குன்வட்டா சமர்பன் முன்னெடுப்பைத் தொடங்கியது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## மேட்டூர் அணை திறப்பு 2025

- மேட்டூர் அணையின் 92 ஆண்டுகள் கால வரலாற்றில், இந்த ஆண்டு டெல்டா பகுதியின் பாசனத்திற்காக அதன் வழக்கமான தேதியான ஜூன் 12 ஆம் தேதியன்று தண்ணீர் திறக்கப் படுவது இது 20வது முறையாகும்.
- கடந்த 61 ஆண்டுகளில், திட்டமிடப்பட்ட தேதிக்குப் பிறகு தண்ணீர் திறக்கப் பட்டது என்ற அதே சமயம் கடந்த 11 ஆண்டுகளில், இந்த அணையானது சரியான நேரத்தில் திறக்கப் படவும் இல்லை.
- டெல்டா பகுதியில் ஜூன் 12 ஆம் தேதி முதல் செப்டம்பர் 15 ஆம் தேதி வரை குறுவை சாகுபடிக்காக 5.22 லட்சம் ஏக்கருக்கு என்று மொத்தம் 135.52 TMC தண்ணீர் தேவைப்

படுகிறது.

- செப்டம்பர் 15 முதல் ஜனவரி 28 ஆம் தேதி வரை, சம்பா மற்றும் தாளடிச் சாகுபடிக்கு, 12.10 லட்சம் ஏக்கருக்கு 268.47 TMC தண்ணீர் தேவைப் படுகிறது.
- இதில் நீர் திறப்பு ஆனது 460 மெகாவாட் நீர் மின் உற்பத்திக்கும் உதவும்.
- இது அடிப்படையில் கொள்ளிடத்தில் உள்ள அணைக் கரையில் இருந்து பிரியும் வடவாறு என்ற கால்வாய் வழியாக காவிரி நீர் மூலம் நீரைப் பெறுகின்ற வீராணம் ஏரியிலிருந்து தண்ணீரைப் பெறுகின்ற சென்னையின் குடிநீர்த் தேவைகளுக்கும் மிக அவசியமாகும்.
- 2024 ஆம் ஆண்டில், ஜூன் மாதத்தில் அணை திறக்கப் படவில்லை என்பதோடு கடந்த ஐந்து ஆண்டுகளில் தேதி தவற விடப்பட்டது இதுவே முதல் முறையாகும்.
- அணை திறக்கும் தேதி கடைசியாக தவற விடப்பட்டது 2019 ஆம் ஆண்டில் தான் ஆகும்.
- அணையின் கொள்ளளவு 120 அடி மற்றும் சேமிப்பு நிலை 93.47 TMC ஆக இருக்கும்.





# தேசியச் செய்திகள்

## அகமதாபாத் விமான விபத்து 2025

- அகமதாபாத்திலிருந்து இலண்டனின் கேட்விக் விமான நிலையத்திற்கு AI171 என்ற பெயரில் இயக்கப்படும் ஏர் இந்தியா போயிங் 787-8 ட்ரீம்லைனர் விமானம் ஆனது 2025 ஆம் ஆண்டு ஜூன் 11 ஆம் தேதியன்று விபத்துக்குள்ளானது.
- இதில் விமானிகள் புறப்பட்ட உடனேயே உயிருக்கு ஆபத்து என்ற அவசரநிலையைக் குறிக்கின்ற 'Mayday' என்ற சமிக்ஞையை விடுத்தனர்.
- இந்த போயிங் 787 ட்ரீம்லைனர் விமானம் ஆனது, குஜராத்தின் அகமதாபாத்தில் உள்ள அகமதாபாத் விமான நிலையத்திலிருந்து ஐக்கியப் பேரரசின் இலண்டன் கேட்விக் விமான நிலையத்திற்கு ஏர் இந்தியா நிறுவனத்தினால் இயக்கப் பட்டது.
- 2011 ஆம் ஆண்டில் இது அறிமுகப் படுத்தப் பட்டதிலிருந்து போயிங் 787 தொடர்பாக ஏற்பட்ட உயிரிழப்பினை ஏற்படுத்திய முதல் விபத்து இது என்பதோடு மேலும் முழு விமானமும் சேதமடைந்த முதல் விபத்து இதுவேயாகும்.
- மேலும், 1985 ஆம் ஆண்டில் ஏர் இந்தியா 182 என்ற விமானத்தின் குண்டுவெடிப்பில் ஏர் இந்தியா நிறுவனத்தின் விமானம் முழுவதும் சேதமடைந்த முதல் விபத்திற்குப் பிறகு ஏற்பட்ட முதல் விபத்து இதுவாகும்.

- இது இந்தியாவின் விமானப் போக்குவரத்து வரலாற்றில் மிகவும் மோசமான ஒரே விமான விபத்து ஆகும்.
- 1996 ஆம் ஆண்டு சர்கி தாத்ரி விமானம் நடுவானில் மோதியதில் சவுதியா போயிங் 747 விமானம் விபத்துக்குள்ளான 29 ஆண்டுகளுக்குப் பிறகு நாட்டில் நடந்த முதல் பெரிய விமானத்தின் விபத்து இதுவாகும்.
- 2009 ஆம் ஆண்டில் விமானச் சேவையில் இணைக்கப்பட்டத்திலிலிருந்து ட்ரீம்லைனர் விமானத்தின் முதல் விபத்து இதுவாகும்.
- இந்த விபத்து குறித்து இந்திய விமான விபத்துப் புலனாய்வு வாரியத்தினால் (AAIB) விசாரிக்கப்பட்டு வருகிறது.
- விமான விபத்துப் புலனாய்வு வாரியம் (AAIB) என்ற அமைப்பு சிவில் / பொது விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் ஒரு பிரிவாகும்.




- இந்தியாவின் விமானப் போக்குவரத்து ஆணையமான பொது விமானப் போக்குவரத்து இயக்குனரகம் (DGCA) மற்றும் ஏர் இந்தியா ஆகியவை இந்த விபத்து குறித்து விசாரணைகளைத் தொடங்கியுள்ளன.
- சிவில்/பொது விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (DGCA) என்பது இந்தியாவில் பொது விமானப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்கான இந்திய அரசாங்கத்தின் ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- இது 2020 ஆம் ஆண்டு விமான (திருத்தம்) சட்டத்தின் கீழ் ஒரு சட்டப்பூர்வ அமைப்பாக மாறியது.
- ஹரியானாவின் குருகிராமில் தலைமையிடத்தினைக் கொண்டுள்ள இது விமான விபத்துக்கள் மற்றும் இதர சம்பவங்களை விசாரிப்பதோடு, விமானப் போக்குவரத்து தொடர்பான அனைத்து விதமான விதிமுறைகளையும் பேணுகிறது மற்றும் விமானப் போக்குவரத்து தொடர்பான அனைத்து உரிமங்களை வழங்கச் செய்வதற்குமான ஒரு பொறுப்பினையும் கொண்டுள்ளது.

- இந்த விமான நிறுவனம் ஆனது டாடா குழுமம் (74.9%) மற்றும் சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் (25.1%) ஆகியவற்றுக்குச் சொந்தமான ஏர் இந்தியா லிமிடெட் என்ற நிறுவனத்திற்குச் சொந்தமானது.
- இண்டிகோவிற்கு அடுத்தபடியாக பயணிகளை ஏற்றிச் செல்வதன் அடிப்படையில் இது இந்தியாவின் இரண்டாவது பெரிய விமான நிறுவனமாக உள்ளது.
- இது 1932 ஆம் ஆண்டில் J.R.D. டாடா அவர்களால் டாடா ஏர்லைன்ஸ் என்ற பெயரில் நிறுவப் பட்டது.

# சர்வதேசச் செய்திகள்

## கடல் சார் NDC சவால்




- பிரான்சின் நைஸ் நகரில் நடைபெற்ற மூன்றாவது ஐக்கியப் பெருங்கடல் மாநாட்டில் (UNOC3) பருவநிலை நடவடிக்கைகளின் மீதான மையக்கருவில் முக்கிய ஒன்றாக பெருங்கடல்களையும் கொண்டு வரச் செய்வதற்கான ஒரு புதிய முயற்சியை பிரேசில் மற்றும் பிரான்சு ஆகிய நாடுகள் தொடங்கியுள்ளன.
- 'கடல் சார் தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்டப் பங்களிப்புகளுக்கான (NDC) சவால்' ஆனது, நாடுகள் தங்கள் தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்டப் பங்களிப்புகளில் (NDCs) கடல் சார்ந்த பருவநிலை நடவடிக்கைகளை இணைக்க வலியுறுத்துகிறது.
- ஆஸ்திரேலியா, பிஜி, கென்யா, மெக்சிகோ, பலாவ் மற்றும் செய்ஷெல்ஸ் குடியரசு ஆகிய ஆறு நாடுகள் இந்த முன்னெடுப்பில் இணைந்துள்ளன.
- 2035 ஆம் ஆண்டிற்கான NDC பங்களிப்புகளுக்கான மூன்றாவது தொகுப்பின் காலக் கெடு ஆனது 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி 10 ஆகும்.
- 195 பங்குதார நாடுகளுள் 21 நாடுகள் மட்டுமே இந்த ஆண்டு தங்கள் பங்களிப்புகளை வழங்கியுள்ளன.
- இந்த ஆண்டில் பருவநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் கட்டமைப்பு மாநாட்டிற்கான (UNFCCC) 30வது பங்குதாரர்கள் மாநாடு (COP30) ஆனது பிரேசிலின் பெலெம் நகரில் நடைபெற உள்ளது.

## செக்யூர் நடவடிக்கை 2025

- சர்வதேசக் காவல்துறையின் (இன்டர்போல்) ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையில் தகவல் திருடர்களுடன் தொடர்புடைய 20,000க்கும் மேற்பட்ட


தீங்கிழைக்கும் IP முகவரிகள் அல்லது தளங்கள் அகற்றப்பட்டுள்ளன.

- இந்த செக்யூர் நடவடிக்கையில் (Operation Secure) 26 நாடுகளைச் சேர்ந்த சட்ட அமலாக்க அமைப்புகள் ஈடுபட்டன.
- தகவல் திருடும் தீம்பொருளுடன் இணைக்கப்பட்ட தீங்கிழைக்கும் உள்கட்டமைப்பை அகற்றுவதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும்.
- அவை சேவையகங்களைக் கண்டறிதல், நேரடி வலையமைப்புகளைக் கண்டறிதல் மற்றும் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட வலை தளங்களை நீக்குதல் ஆகியவற்றில் பணி ஆற்றின.
- இதில் தகவல் திருடும் தீம்பொருள் ஆனது இணையவெளிக் குற்றவாளிகளுக்கான ஒரு முதன்மைக் கருவியாக உள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## TOI-6894b – வாயு நிரம்பிய இராட்சத கோள்




- சனிக்கோளின் அளவை ஒத்த ஒரு வாயு நிரம்பிய இராட்சத கோளானது, வழக்கத்திற்கு மாறான ஒரு சிறிய செந்நிறக் குள்ள நட்சத்திரத்தைச் சுற்றி வருவது கண்டறியப்பட்டு உள்ளது.
- இந்த அரிய இணைவானது சிறிய நட்சத்திரங்கள் அவற்றைச் சுற்றியுள்ள வட்டுகளில் இவ்வளவு பெரிய கோள்களை உருவாக்க போதுமான கூறுகளைக் கொண்டிருக்காது என்று கூறும் தற்போதைய மாதிரிகளை மறுக்கின்றது.

- TOI-6894 என பெயரிடப்பட்ட இந்த நட்சத்திரமானது சூரியனின் நிறையின் ஐந்தில் ஒரு பங்கு மட்டுமே ஆகும்.
- TOI-6894 ஆனது புவியிலிருந்து சுமார் 240 ஒளி ஆண்டுகள் தொலைவில் லியோ என்ற விண்மீன் திரளில் உள்ளது.
- இது ஒரு பெரிய கோளினைக் கொண்டிருக்கும் மிகச்சிறிய அறியப்பட்ட நட்சத்திரம் ஆகும்.
- இந்தக் கிரகம் ஆனது தோராயமாக மூன்று நாட்களில் ஒரு சுற்றுப்பாதை பயணத்தை நிறைவு செய்கிறது.
- புவியானது சூரியனுக்கு எவ்வளவு அருகில் உள்ளதோ, அதே போல இக்கோள் ஆனது அதன் நட்சத்திரத்திற்கு சுமார் 40 மடங்கு அருகில் உள்ளது.
- நமது சூரிய மண்டலத்திற்கு வெளியே காணப்படும் இதர மற்ற கிரகங்களை விட இது மிகவும் குளிர்ந்ததாக உள்ளது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## WEF பாலின இடைவெளிக் குறியீடு 2025




- உலகப் பொருளாதார மன்றத்தின் 2025 ஆம் ஆண்டு உலகளாவிய பாலின இடைவெளி அறிக்கையில் இடம் பெற்றுள்ள 146 நாடுகளுள் இந்தியா 131வது இடத்தைப் பிடித்து உள்ளது.
- வெறும் 64.1% சமநிலை மதிப்பெண்ணுடன், தெற்காசியாவில் மிகக் குறைந்த ஒரு தர வரிசையில் உள்ள நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.
- இத்தரவரிசையானது பூடான் (119வது), நேபாளம் (125வது) மற்றும் இலங்கை (130வது) போன்ற அதன் அண்டை நாடுகளை விட பின்தங்கி உள்ளது.
- கடந்த ஆண்டு இந்தத் தரவரிசையில் இந்தியா 129வது இடத்தைப் பிடித்தது.
- ஐஸ்லாந்து தொடர்ந்து 16வது ஆண்டாக தரவரிசையில் முன்னணியில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து பின்லாந்து, நார்வே, ஐக்கியப் பேரரசு மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகள் உள்ளன.

- உலகளாவியப் பாலின இடைவெளியானது 2025 ஆம் ஆண்டில் ஓரளவு குறைந்துள்ளது என்பதோடு 2024 ஆம் ஆண்டில் 68.4% ஆக இருந்த உலகளாவியப் பாலின இடைவெளி 2025 ஆம் ஆண்டில் 68.8% ஆக இருந்தது.
- மிக அதிக வருமானம் கொண்ட நாடுகள் தங்கள் பாலின இடைவெளியில் சுமார் 74.3 சதவீதத்தினை நிவர்த்தி செய்துள்ளன.
- பாகிஸ்தான் (148), சூடான், சாட் மற்றும் ஈரான் ஆகியவை கடைசி இடங்களில் உள்ளன.

# மாநிலச் செய்திகள்

## கோவாவின் ஃபெனி பானம் - புவிசார் குறியீடு




- கோவா மாநிலத்தின் ஒஸோ ஃபெனி பானமானது, புவிசார் குறியீட்டினைப் பெற்ற இந்தியாவின் முதல் ஃபெனி பானம் ஆகும்.
- முந்திரி பழங்கள் அல்லது தேங்காய் சாற்றினை நொதிக்கச் செய்தல் மற்றும் இரட்டை வடிகட்டுதல் மூலம் ஃபெனி தயாரிக்கப்படுகிறது.
- போர்த்துகீசியச் சமயப் பரப்பாளர்கள் வர்த்தகத்திற்காக இங்கு வந்தபோது 1600 ஆம் ஆண்டுகளில் ஃபெனி பானம் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ஃபெனி பானத்தினை உருவாக்கியவர்கள் பதிகர்கள் என்று அழைக்கப்பட்டனர்.
- ஃபெனியின் திரவமாக்கம் ஆனது லௌனி எனப் படுகின்ற ஒரு களிமண் பானையில் நடைபெறுகிறது.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச இருப்புப் பாதை கடப்பு விழிப்புணர்வு தினம் 2025 - ஜூன் 05


- சர்வதேச இருப்புப் பாதை கடப்பு விழிப்புணர்வு தினமானது (ILCAD) சர்வதேச ரயில்வே ஒன்றியத்தினால் (UIC) முன்னெடுத்து அனுசரிக்கப்படுகிறது.
- முதல் ஐரோப்பிய சர்வதேச இருப்புப் பாதை கடப்பு விழிப்புணர்வு தினம் ஆனது 2009 ஆம் ஆண்டு ஜூன் 25 ஆம் தேதியன்று கொண்டாடப்பட்டது.
- ILCAD ஆனது இருப்புப் பாதை கடப்பு அபாயங்கள் குறித்து பொதுமக்களுக்குப் பெரும்

விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், பாதுகாப்பை நன்கு மேம்படுத்துவதையும் ஒரு முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

- 2025 ஆம் ஆண்டிற்கான ILCAD தினத்தின் தொடக்க மாநாட்டின் கருத்துரு, 'Helping people make good decisions' with the slogan 'Safe decisions – every time'' என்பதாகும்.




## உலக அங்கீகார தினம் 2025 - ஜூன் 09





- இந்தத் தினமானது, மிகத் தரமான உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல், உலகளாவிய வர்த்தகத்தைச் செயல்படுத்துதல் மற்றும் பொருளாதார மேம்பாட்டினை மிக நன்கு ஊக்குவித்தல் போன்றவற்றில் அங்கீகார வழங்கீட்டின் பெரும்பங்களிப்பை எடுத்துக் காட்டுகிறது.
- இந்தியாவில் அங்கீகார வழங்கலின் தேசிய அளவிலான பொறுப்பினை இந்தியத் தர நிர்ணய சபை (QCI) கொண்டுள்ளது.
- QCI ஆனது 1997 ஆம் ஆண்டில் தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையின் (DPIIT) கீழ் ஒரு தன்னாட்சி பெற்ற அமைப்பாக நிறுவப்பட்டது.

- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Accreditation: Empowering Small and Medium Enterprises (SMEs)" என்பதாகும்.

## சர்வதேச ஆவணக் காப்பக தினம் 2025 - ஜூன் 09

- 1948 ஆம் ஆண்டில் இந்த தினத்தில் தான், யுனெஸ்கோ அமைப்பின் வழி காட்டுதலின் படி சர்வதேச ஆவணக் காப்பக சபை (ICA) உருவாக்கப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "#ArchivesAreAccessible – Archives for Everyone" என்பதாகும்.
- 2025 ஆம் ஆண்டிற்கான சர்வதேச ஆவணக் காப்பக வாரம் ஆனது ஜூன் 09 முதல் 13 ஆம் தேதி வரை அனுசரிக்கப்பட்டது.




## சர்வதேச விளையாட்டுத் தினம் 2025 - ஜூன் 11




- இந்தத் தினம் என்பது உலகளவில் குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சி மற்றும் நல்வாழ்வில் விளையாட்டின் முக்கியப் பங்களிப்பை எடுத்துக்காட்டுகிறது.
- குழந்தைகள் இளைப்பாறச் செய்தல், ஓய்வு, விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடுதல் ஆகியன இதில் 31வது சரத்தின் கீழ் ஓர் அடிப்படை உரிமையென ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகளின் உரிமைகள் தொடர்பான

உடன்படிக்கை அதிகாரப் பூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளது.

- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Choose Play – Every Day" என்பதாகும்.

## குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான உலக தினம் 2025 - ஜூன் 12




- இந்த ஆண்டானது குழந்தைத் தொழிலாளர் முறையின் மோசமான நிலைகள் குறித்த உடன்படிக்கையின் 26வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'Progress is clear, but there's more to do: let's speed up efforts!' என்பதாகும்.
- ஆப்பிரிக்கா இதர பிற பிராந்தியங்களுடன் ஒப்பிடும் போது குழந்தைத் தொழிலாளர் விகிதத்தில் (1/5) மற்றும் எண்ணிக்கை ரீதியாக சுமார் 72 மில்லியன் என்ற குழந்தைத் தொழிலாளர்களைக் கொண்டு முதலிடத்தில் உள்ளது.
- இந்தப் பிராந்தியத்தில் அனைத்து குழந்தைத் தொழிலாளர் விகிதத்தில் 7% மற்றும் எண்ணிக்கை அடிப்படையில் 62 மில்லியன் குழந்தைத் தொழிலாளர்களைக் கொண்டு இந்த இரண்டு குறியீடுகளிலும் ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியம் இரண்டாவது இடத்தில் உள்ளன.
- ILO உடன்படிக்கை எண். 138 ஆனது குழந்தைத் தொழிலாளர்களின் ஒரு குறைந்தபட்ச வயதையும், ILO உடன்படிக்கை எண். 182 ஆனது குழந்தைத் தொழிலாளர்களின் மிக மோசமான நிலைகள் குறித்தும் கையாள்கிறது.


## சர்வதேச தோல் வெளிர்தல் நோய் விழிப்புணர்வு தினம் 2025 - ஜூன் 13




- அல்பினிசம் (தோல் வெளிர்தல் நோய்) என்பது ஓர் அசாதாரணமான, மரபணு ரீதியாக மரபணு ரீதியாகப் பெறப்பட்ட ஒரு நோயாகும், இதன் விளைவாக சருமத்தில் நிறமிகள் இழப்பினால் தோல், முடி மற்றும் கண்கள் வழக்கத்திற்கு மாறாக வெளிர்கின்றன.

- தோல் வெளிர்தல் நோய் உள்ள நபர்கள் புற ஊதா (UV) கதிர்களால் அதிகம் பாதிக்கப் படுகின்றனர்.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு: "Demanding our rights: Protect our skin, Preserve our lives" என்பதாகும்.

## உலக இரத்த தான தினம் 2025 - ஜூன் 14




- இது 1868 ஆம் ஆண்டு ஜூன் 14 ஆம் தேதியன்று பிறந்த கார்ல் லேண்ட்ஸ்டெய்னரின் பிறந்த நாள் அன்று கொண்டாடப்படுகிறது.
- லேண்ட்ஸ்டெய்னருக்கு ABO இரத்தக் குழுவினைக் கண்டறிந்ததற்காக நோபல் பரிசு வழங்கப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'Give blood, give hope: together we save lives' என்பதாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★